[8th March 1966

கோர்ட்டுக்குப் போயிருக்கிறார். ஆகையினாலே, கேஸ் இருக்கிற வரையில் நிலத்தை அக்வயர் செய்து கட்டடத்தைக் கட்ட இயலாது. அதுதான் காரணம்.

* 204 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெருக்கடி நிலை காரணமாக மருத்துவமனை கட்டட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகைக்கு மேற்பட்ட வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) Consequent on the intervention of the National Emergency, the Government ordered towards the end of 1962 that all building programmes relating to Government Medical Institutions on which work had not commenced be deferred or slowed down. On the aggravation of the emergency by the conflict with Pakistan, orders were issued in October, 1965 that all building schemes costing Rs. 1 lakh and above on which work had not yet started and which were not directly related to agricultural production should be stopped and resumed, if need be, only after 1st April 1966.

திரு. ஆ. தங்கவேலு : நெருக்கடி நிலை காரணமாக மருத்துவ மனைகள் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, மருத்துவ மனைகள் கட்டுவதில் 3 லட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக் கூடியதைக் கட்ட உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதன் மேல் திண்டிவனம் மருத்துவ மனை வேலை நடந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இது வரையில் துவக்கப்படவில்லை. ஆகையினால், அதை உடனடியாக ஆரம்பிக்க உத்தரவிடுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சென்ற ஆண்டு சொன்ன பிறகு பாகிஸ்தான் அக்ரெஷன் ஏற்பட்ட பிறகு ஒத்திப் போடவேண்டியிருந்தது.

* 205 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் " புகார் புத்தகம் " வைக்கவேண்டும் என்று தஞ்சை மாவட்ட மக்கள் நல மன்றத்திடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

8th March 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் ராஜா மிராஸ்தார் அரசாங்க மருத்துவ மனையில் முன்னமேயே "கருத்துக் குறிப்புப் புத்தகம்" ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய புத்தகங்களை வைக்குமாறு இம் மாநிலத்திலுள்ள மற்றெல்லா அரசாங்க மருத்துவ மனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* 206 *Q.*—SRI V. SANKARAN : SRI K. B. PALANI } Will the Hon. the Minister for Pubic Health be pleased to state—

(*a*) whether it is a fact that a patient developed tetanus post-operative in the theatre resulting in his death, in the Raja Mirasdar Government Headquarters Hospital, Thanjavur ; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) Immediately after the incident, A. T. S. was administered to all the post-operative cases and the theatre completely sterilised. A committee consisting of the Superintendent of the Hospital, the operating Surgeon and the Anæsthetist has been constituted to enquire into the matter.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த சாவுக்குக் காரணம், அறுவைக் கருவிகள் சரியான முறையில் வைக்கப்படவில்லை என்றும் அதன் காரணமாகத்தான் திடீரென்று இறந்தார் என்றும் செய்தி வந்துள்ளது. அது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது காரணம் இல்லை. ஏன் என்றால் அந்தக் கருவிகளைக் கொண்டு பிறகு ஆபரேஷன் செய்திருக்கிறார்கள், அதனால் ஒன்றும் நேரவில்லை. ஒரு வேளை ஆபரேஷன் செய்வதற்கு முன்பு பேஷன்ட் கொண்டு போடப்பட்ட இடத்தில் ரோட்டில் பஸ், லாரிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால் டஸ்ட் போயிருக்கும் என்று ஸஸ்பெக்ட் செய்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : இந்த விபத்து ஏற்பட்ட பிறகு இந்த ஆபரேஷன் தியேட்டரை நன்றாக சுத்தம் செய்த பிறகு, ஸ்டெரிலைஸ் செய்த பிறகுதான் அங்கு மற்ற ஆபரேஷன் செய்யப்படும் என்று சொல்லி டாக்டர்கள் மற்ற ஆபரேஷன்களை நிறுத்தி விட்டதாகத் தெரிகிறது. இது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கண்டிப்பாக வாஷிங் செய்து, ஸ்டெரிலைஸ் செய்த பிறகுதான் ஆபரேஷன்கள் நடத்த முடியும். அதற்கு முன்னால் அந்தத் தியேட்டரில் ஆபரேஷன் செய்ய முடியாது. அதனால்தான் அது மூடி வைக்கப்பட்டிருக்கிறது. 9-00 a.m.